# 92/2025-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number |
|---|---|---|

**Total Number of Questions : 100** | **Time : 1 Hour 30 Minutes**

**Maximum Marks : 100**

A

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet Alpha Code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the Alpha Code does not match to the allotted Alpha Code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same Alpha Code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same Alpha Code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3$^{rd}$ mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. மார்த்தாண்ட வர்மா தொடர்பாக கீழ்க்கண்ட அறிக்கைகளுள் சரியான கூற்று எது?
   i. 1809 இல் குண்டறா பிரகடனத்தை அவர் வெளியிட்டார்.
   ii. 1741 இல் குளச்சல் போரில் டச்சுக்காரர்களை அவர் தோற்கடித்தார்.
   iii. திருப்படிதானத்தை அவர் வழங்கினார்.
   iv. 1721 இல் ஆற்றிங்கல் கலகத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.
   (A) i மட்டும்
   (B) ii மற்றும் iv
   (C) ii மற்றும் iii
   (D) iv மட்டும்

2. சீனப் புரட்சியுடன் தொடர்புடைய நிகழ்வு எது?
   (A) கறுப்புப் போர்
   (B) பாஸ்டன் தேநீர் விருந்து
   (C) டென்னிஸ் மைதான கூட்டம்
   (D) பிப்ரவரி புரட்சி

3. பஞ்சசீலக் கொள்கையில் எந்த நாடுகள் கையொப்பமிட்டன?
   (A) இந்தியா - பாகிஸ்தான்
   (B) இந்தியா - ஸ்ரீலங்கா
   (C) இந்தியா - ஆப்கானிஸ்தான்
   (D) இந்தியா - சீனா

4. இறப்பிற்கு பிறகு எம். டி. வாசுதேவன் நாயர் பெற்ற விருது எது?
   (A) பத்மஸ்ரீ
   (B) பத்ம பூஷண்
   (C) பத்ம விபூஷன்
   (D) ஞானபீடம்

5. ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான சரியான கூற்று எது?
   i. இது 24 அக்டோபர் 1945 அன்று உருவானது.
   ii. இது 26 நவம்பர் 1949 அன்று உருவானது.
   iii. இதன் முதல் பொதுச்செயலாளர் நார்வே நாட்டைச் சேர்ந்த திரிக்வல்லி ஆவார்.
   iv. இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான ஒரு அமைப்பாகும்.
   (A) ii மற்றும் iii சரியானவை
   (B) i, iii மற்றும் iv ஆகியவை சரியானவை
   (C) ii மற்றும் iv சரியானவை
   (D) i மட்டுமே சரியானது

6. 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திரப் போர் குறித்து, பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று அல்ல?

(A) மங்கள் பாண்டே உயிர்த்தியாகம் செய்த முதல் நபர் ஆவார்.

(B) இந்து-முஸ்லிம் ஒற்றுமை இப்போராட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்கியது.

(C) கலகத்திற்குப் பிறகு, பிரிட்டிஷ் மகாராணி இந்தியாவின் நிர்வாகத்தை நேரடியாக ஏற்றுக்கொண்டார்.

(D) முதல் இந்திய சுதந்திரப் போர் ஜான்சியில் தொடங்கியது.

7. அடிவளிமண்டலத்தில் ஒவ்வொரு 165 மீட்டர் உயரத்திற்கும், வெப்பநிலை ஒரு டிகிரி செல்சியஸ் என்ற விகிதத்தில் குறையும் நிகழ்விற்கு என்ன பெயர் தரப்பட்டுள்ளது?

(A) நிலையான வெப்ப இழப்பு விகிதம்

(B) வெப்பக் கடத்தல்

(C) வெப்பச்சலனம்

(D) பிரதிபலிப்பு

8. பூமி, நிலவு, சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது கீழ்கண்டவற்றுள் எந்த ஏற்ற இறக்கம் (கடல் மட்டத்தில்) உருவாகிறது?

(A) சப்தமி அலை

(B) வாவு அலை

(C) குறைந்த அலை

(D) கலப்பு அலை

9. சுபன்சிரி ஆறு எது? அதன் துணை ஆறு எது?

(A) கங்கா

(B) யமுனா

(C) நர்மதா

(D) பிரம்மபுத்திரா

10. கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களை இணைக்கும் உயிர்க்கோளக் காப்பகம் எது?

(A) மன்னார் வளைகுடா

(B) சுந்தரவனக்காடுகள்

(C) நீலகிரி

(D) நந்தா தேவி

11. இறகுகளின் வடிவத்தில் காணப்படும் மேகங்களுக்கு என்ன பெயர்?
(A) குருள் (சிரஸ்) மேகங்கள்
(B) படை (ஸ்ட்ராடஸ்) மேகங்கள்
(C) கார்முகில் (நிம்பஸ்) மேகங்கள்
(D) திரள் (குமுலஸ்) மேகங்கள்

12. இந்தியாவில் முதன்முதலில் ஏடிஎம் சாதனம் நிறுவப்பட்ட ரயில் எது?
(A) வந்தே பாரத்
(B) பஞ்சவடி எக்ஸ்பிரஸ்
(C) வேணாடு எக்ஸ்பிரஸ்
(D) கரிப் ரத் எக்ஸ்பிரஸ்

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள வட்டங்களிலிருந்து இடைநிலையைக் (Median) கணக்கிடுக.

| வ.எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பெண் | 28 | 32 | 26 | 62 | 44 | 18 | 40 |

(A) 28
(B) 32
(C) 40
(D) 62

14. பசுமைப் புரட்சியின் ஒரு பகுதியாக இந்தியாவில் செயல்படுத்தப்பட்ட கிரிஷோன்னதி யோஜனா என்ற ஒருங்கிணைந்த திட்டத்தில், பின்வருவனவற்றுள் எவை சேர்க்கப்பட்டுள்ளன?
i. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (MIDH)
ii. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY)
iii. நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA)
iv. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (NFSM)
(A) ii, iii மட்டும்
(B) ii, iii, iv மட்டும்
(C) i, iii, iv மட்டும்
(D) மேற்கண்ட அனைத்தும் i, ii, iii, iv

15. இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கித் தவிக்கும் இந்தியக் குடிமக்களை மீட்டு வருவதற்கான திட்டத்தின் பெயர் என்ன?
(A) ஆபரேஷன் விஜய்
(B) ஆபரேஷன் கூக்கூன்
(C) ஆபரேஷன் ப்ளூ ஸ்டார்
(D) ஆபரேஷன் அஜய்

16. 2022-23 நிதிநிலை அறிக்கையில் (பட்ஜெட்) இடம்பெற்ற முக்கியத் திட்டமான பிஎம் கதி சக்தி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

i. பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான ஒரு மாற்றத்தை உருவாக்கும் அணுகுமுறை.

ii. இந்திய அரசின் கீழ் செயல்படும் 16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளை ஒன்றிணைக்கும் ஒரு டிஜிட்டல் தளம்.

iii. 5 இயக்கப் பொறிகளால் முன்னெடுக்கப்படுகிறது.

iv. இரயில்வே, சாலைப் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளை ஒன்றிணைக்கும் பல்முனைப் போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

(A) i, ii, iv மட்டும்

(B) i, iii, iv மட்டும்

(C) ii, iii, iv மட்டும்

(D) மேற்கண்ட அனைத்தும்

17. (அக்டோபர் 2023 நிலவரப்படி) இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பின்வரும் கொள்கை மற்றும் கையிருப்பு விகிதங்களில் எது தவறானது?

(A) ரெப்போ விகிதம் - 6.50%

(B) ரிசர்வ் வங்கியிடமிருந்து வங்கிகள் பெறும் கடன்களுக்கான வட்டி விகிதம் - 6.75%

(C) ரொக்க இருப்பு விகிதம் - 4.50%

(D) வங்கி விகிதம் - 5.25%

18. பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக சந்தைக்கு எடுத்துச் செல்லும் இடத்திற்கு என்ன பெயர்?

(A) ஹடஸ்பர் மண்டி

(B) யேட்டு பஜார்

(C) அப்னி மண்டி

(D) உழவர் சந்தை

19. இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக இருந்தவர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு

(B) சர்தார் வல்லபாய் படேல்

(C) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

(D) டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

20. இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என்று அழைக்கப்படும் சட்டப்பிரிவு எது?

(A) பிரிவு 17

(B) பிரிவு 32

(C) பிரிவு 25

(D) பிரிவு 19

21. எந்த அரசியலமைப்புத் திருத்தம் இந்திய அரசியலமைப்பில் அடிப்படை அதிகாரங்களை சேர்த்தது?

(A) 42

(B) 44

(C) 52

(D) 74

22. மாநிலங்களவை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. இது இந்திய நாடாளுமன்றத்தின் மேலவை ஆகும்.

2. மாநிலங்களவையில் 250 உறுப்பினர்கள் உள்ளனர்.

3. துணைக் குடியரசுத் தலைவரே மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.

(A) 1 & 2

(B) 2 & 3

(C) 1 & 3

(D) மேற்கண்ட அனைத்தும்

23. உள்ளாட்சி அமைப்புகள் எந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன?

(A) மாநிலப் பட்டியல்

(B) ஒன்றியப் (மத்திய அரசின்) பட்டியல்

(C) பொதுப் பட்டியல்

(D) எஞ்சிய அதிகாரங்கள்

24. உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை அதிகாரம் யாருக்காகப் பயன்படுத்தப்படுகிறது?

(A) தலைமை நீதிபதி

(B) குடியரசுத் தலைவர்

(C) பிரதமர்

(D) ஆளுநர்

25. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை, வழிகாட்டு நெறிமுறைகள் என்ற கருத்தை எந்த நாட்டிலிருந்து ஏற்றுக்கொண்டது?
(A) பிரிட்டிஷ் அரசியலமைப்பு சட்டம்
(B) அமெரிக்க அரசியலமைப்பு சட்டம்
(C) ஐரிஷ் அரசியலமைப்பு சட்டம்
(D) ஆஸ்திரேலிய அரசியலமைப்பு சட்டம்

26. இந்தியாவின் முதல் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?
(A) வி. பி. மேனன்
(B) சுகுமார் சென்
(C) வி. கிருஷ்ண மேனன்
(D) டாக்டர் ஃபசல் அலி

27. உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் எது?
(A) ஹவுரா பாலம்
(B) செனாப் பாலம்
(C) பாம்பன் பாலம்
(D) கோதாவரி பாலம்

28. சமூக நீதித் துறையின் பிரதிபா திட்டத்தின் பயனாளிகள் யார்?
(A) முதியோர்
(B) மாற்றுத்திறனாளிகள்
(C) சமூகப் பாதுகாப்பு
(D) மூன்றாம் பாலினத்தவர் (திருநங்கையர்)

29. கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் யார்?
(A) முதலமைச்சர்
(B) வருவாய் துறை அமைச்சர்
(C) தலைமைச் செயலாளர்
(D) ஆளுநர்

30. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்தும் அமைப்பு _______ ஆகும்.
(A) இந்தியத் தேர்தல் ஆணையம்
(B) மாநிலத் தேர்தல் ஆணையம்
(C) மாநில அரசு
(D) உள்ளாட்சி அமைப்புகள்

31. இந்திய மகளிர் பிரீமியர் லீக் தொடரின் ஒரு போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய கிரிக்கெட் வீராங்கனை.

(A) ஆஷா ஷோபனா

(B) ஸ்மிருதி மந்தனா

(C) மின்னுமணி

(D) ஹர்மன்ப்ரீத் கௌர்

32. காற்றேற்ற விரிவு (எம்பிசீமா) என்பது எந்த உறுப்பைப் பாதிக்கும் ஒரு வாழ்க்கை முறை நோயாகும்?

(A) நுரையீரல்

(B) கல்லீரல்

(C) இதயம்

(D) மூளை

33. தூக்கம் மற்றும் விழிப்பு சுழற்சியைப் பராமரிக்க உதவும் ஹார்மோன் எது?

(A) மெலடோனின்

(B) தைராக்ஸின்

(C) ஆக்ஸிடாஸின்

(D) அட்ரினலின்

34. தைராய்டு சுரப்பியின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் கனிமம் எது?

(A) கால்சியம்

(B) மெக்னீசியம்

(C) அயோடின்

(D) சோடியம்

35. பின்வருவனவற்றுள், நோய்கள் மற்றும் அவற்றின் நோய்க்கிருமிகள் குறித்த தவறான இணை எது?

(A) புரோட்டோசோவா - மலேரியா

(B) பாக்டீரியா - காசநோய்

(C) வைரஸ் - நிமோனியா

(D) பூஞ்சை - படர்தாமரை

36. ஓசோன் படலம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

i. ஓசோன் படலத்தின் பெரும்பாலான பகுதி அடிவளிமண்டலத்தில் காணப்படுகிறது.

ii. குளோரோஃபுளோரோகார்பன்கள் (CFCS) ஓசோன் படலம்/சிதைவுக்குக் காரணமாகின்றன.

iii. சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்வீச்சிலிருந்து பூமியில் உள்ள உயிர்களை ஓசோன் பாதுகாக்கிறது.

(A) i & ii மட்டும்

(B) ii & iii மட்டும்

(C) i & iii மட்டும்

(D) i, ii & iii மேற்கண்ட அனைத்தும் சரியானவை

37. பெல்லாக்ரா (தோல் வறட்சி) என்பது எந்த வைட்டமின் குறைபாட்டால் ஏற்படும் நோயாகும்?

(A) வைட்டமின் B1

(B) வைட்டமின் B2

(C) வைட்டமின் B3

(D) வைட்டமின் B7

38. ஒரு லென்சின் திறன் +2.5D. இது எந்த வகை வில்லை (லென்ஸ்)? அதன் குவிய நீளம் என்ன?

(A) குவி வில்லை, 25 செ.மீ

(B) குழி வில்லை, 40 செ.மீ

(C) குவி வில்லை, 40 செ.மீ

(D) குழி வில்லை, 25 செ.மீ

39. பின்வருவனவற்றுள் எதில் ஒலியின் வேகம் மிக அதிகமாக இருக்கும்?

(A) காற்று

(B) வெற்றிடம்

(C) நீர்

(D) எஃகு

40. ‘S’ பரப்பு இழுவிசையும், ‘R’ ஆரமும் கொண்ட ஒரு சோப்புக் குமிழின் உள்ளே உள்ள அழுத்தம் _______.

(A) $\frac{4S}{R}$

(B) 0

(C) $\frac{2S}{R}$

(D) $\frac{S}{R}$

41. இஸ்ரோவின் மூன்றாவது சந்திரப் பயணத்திட்டமான சந்திரயான்-3, நிலவில் ______ அன்று தரையிறங்கியது.

(A) ஜூலை 14, 2023

(B) ஆகஸ்ட் 23, 2023

(C) செப்டம்பர் 15, 2023

(D) ஆகஸ்ட் 30, 2023

42. உப்பு கரைசலின் pH மதிப்பு கீழே தரப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

i. $NH_4Cl$ நீர்க்கரைசலின் pH மதிப்பு 7-ஐ விடக் குறைவாகும்.

ii. $NaNO_3$ நீர்க்கரைசலின் pH மதிப்பு 7-ஐ விட அதிகமாகும்.

iii. $CH_3COONa$ நீர்க்கரைசலின் pH மதிப்பு 7-ஐ விட அதிகமாகும்.

(A) ii & iii

(B) i & iii

(C) i, ii & iii

(D) i & ii

43. பின்வரும் வேதிவினைகளில் எது ஆக்சிஜனேற்ற-ஒடுக்க வினை அல்ல?

(A) $CH_4 + 2O_2 \xrightarrow{\Delta} CO_2 + 2H_2O$

(B) $2H_2O_2 \longrightarrow 2H_2O + O_2$

(C) $CaCO_3 \xrightarrow{\Delta} CaO + CO_2$

(D) $2NaH \xrightarrow{\Delta} 2Na + H_2$

44. நிரல் I-இல் உள்ள தனிமங்களை, நிரல் II-இல் உள்ள பாலிங் அளவுகோலின்படியான அவற்றின் எலக்ட்ரான்களை இழுக்கும் அணுவின் கவர்திறனுடன் பொருத்தினால், சரியான வரிசை எது?

| | I தனிமம் | | II எலக்ட்ரான் இழுதிறன் |
|---|---|---|---|
| a | போரான் | 1 | 3 |
| b | கார்பன் | 2 | 1.5 |
| c | நைட்ரஜன் | 3 | 2 |
| d | பெரிலியம் | 4 | 2.5 |

(A) a-4, b-3, c-2, d-1

(B) a-2, b-4, c-1, d-3

(C) a-2, b-1, c-4, d-3

(D) a-3, b-4, c-1, d-2

45. 2023-ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசை வென்ற கண்டுபிடிப்பு எது?

(A) மூலக்கூறு உருவாக்கம்

(B) குவாண்டம் புள்ளிகள்

(C) மரபணுத்தொகை திருத்தம்

(D) கிரையோ எலக்ட்ரான் நுண்ணோக்கி

46. பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று?

i. 1847-ஆம் ஆண்டில், ஹெர்மன் குண்டர்ட் ராஜ்யசமாசாரம் என்ற முதல் மலையாள செய்தித்தாளைத் தொடங்கினார்.

ii. பஸ்சிமோதயம் என்ற இரண்டாவது மலையாள செய்தித்தாள் 1847-ஆம் ஆண்டு ஹெர்மன் குண்டர்ட்டால் தொடங்கப்பட்டது.

iii. ஹெர்மன் குண்டர்ட், லண்டன் மிஷன் சொசைட்டியின் உறுப்பினராக இருந்தார்.

(A) i & ii

(B) ii & iii

(C) i & iii

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை i, ii & iii

47. பின்வருவனவற்றுள் எது தவறானது?

i. பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்ற 2024 ஒலிம்பிக் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 71-வது இடத்தைப் பிடித்தது.

ii. 2020 டோக்கியோ ஒலிம்பிக்ஸ் மற்றும் 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில், பி. ஆர். ஸ்ரீஜேஷ் ஆண்கள் ஹாக்கி அணியில் கோல்கீப்பராக இருந்தார்.

iii. பி. ஆர். ஸ்ரீஜேஷுக்கு, 2019-ஆம் ஆண்டில் இந்தியாவின் நான்காவது உயரிய குடிமகன் விருதான பத்மஸ்ரீ விருதும், 2025-ஆம் ஆண்டில் மூன்றாவது உயரிய குடிமகன் விருதான பத்ம பூஷன் விருதும் வழங்கப்பட்டன.

(A) i & ii

(B) ii & iii

(C) i & iii

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை i, ii & iii

48. பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று?

i. கேரள கலாமண்டலம், 1930-ஆம் ஆண்டு திருச்சூர் மாவட்டத்தில் பாரதப்புழா ஆற்றங்கரையில், நாலப்பாட்டு நாராயண மேனன் மற்றும் முகுந்தராஜா ஆகியோரால் நிறுவப்பட்டது.

ii. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அழிவின் விளிம்பில் இருந்த கதகளி, கூடியாட்டம், மோகினியாட்டம் போன்ற கலைகளுக்குப் புத்துயிர் அளித்துப் பாதுகாத்த அதன் முயற்சிகளுக்காக கேரள கலாமண்டலம் புகழ் பெற்றது.

iii. கேரள கலாமண்டலம், 2006-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் “ட்ரீம்ஸ் பல்கலைக்கழகம்” என அறிவிக்கப்பட்டது.

(A) i & ii

(B) ii & iii

(C) i & iii

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை i, ii & iii

49. பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று?

i. 2019-ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருதின் 55-வது வெற்றியாளர் அக்கித்தம் அச்சுதன் நம்பூதிரி ஆவார்.

ii. "வெளிச்சம் துக்கமானுண்ணி, தமஸ்ஸல்லோ சுகப்பிரதம்" என்ற வரிகள், அக்கித்தத்தின் "இருபதாம் நூற்ட்டாண்டின்டெ இதிஹாசம்" என்ற படைப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

iii. மலையாளத்தில் முதல் ஞானபீட விருதைப் பெற்றவர் சி. சங்கரகுரூப் ஆவார்.

(A) i & ii

(B) ii & iii

(C) i & iii

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை i, ii & iii

50. பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று?

i. வைக்கம் அப்துல் காதர் மௌலவி மலபார் முஸ்லிம் மகாசபையை உருவாக்கினார்.

ii. சுதேசாபிமானி என்ற செய்தித்தாளின் நிறுவனர் வைக்கம் அப்துல் காதர் மௌலவி ஆவார்.

iii. கே. ராமகிருஷ்ண பிள்ளை சுதேசாபிமானி என்ற செய்தித்தாளின் ஆசிரியராக இருந்தார்.

(A) i & ii

(B) iii & i

(C) ii & iii

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை i, ii & iii

51. ஒற்றைப்படை எண்ணைக் கண்டறியவும்: 59, 69, 79, 89

(A) 59

(B) 69

(C) 79

(D) 89

52. 11 முதல் 49 வரையிலான ஒற்றைப்படை எண்களின் கூட்டுத்தொகை _____ ஆகும்.

(A) 600

(B) 700

(C) 800

(D) 900

53. கீழ்வரும் எண்களின் இடைநிலையைக் (மீடியன்) கண்டறிக:

4.20, 6.42, 3.16, 4.60, 2.12, 5.21

(A) 4.50

(B) 4.30

(C) 4.20

(D) 4.40

54. $\frac{(123-2)^{\frac{1}{2}}(78+3)^{\frac{1}{4}}}{(243)^{\frac{1}{5}}}$

(A) 10

(B) 11

(C) 12

(D) 13

55. "DOG = 274", "CAT = 358" எனில் "GOAT = ______"

(A) 4785

(B) 4578

(C) 4857

(D) 4758

56. $22\frac{1}{6}+7\frac{1}{6}-3\frac{1}{6}=$

(A) $26\frac{1}{6}$

(B) $27\frac{1}{6}$

(C) $28\frac{1}{6}$

(D) $29\frac{1}{6}$

57. ஒரு தேர்வில் தேர்ச்சி பெற நீத்துவிற்கு 60% மதிப்பெண்கள் தேவை. அவர் 180 மதிப்பெண்கள் பெற்றார். அவர் தேர்ச்சி பெற இன்னும் 60 மதிப்பெண்கள் தேவைப்படுகிறது. அப்படியெனில், தேர்வின் மொத்த மதிப்பெண்கள் எவ்வளவு?

(A) 350

(B) 400

(C) 450

(D) 500

58. ஒரு கடிகாரத்தின் நிமிட முள் 4 செ.மீ. நீளமுடையது. கடிகாரத்தில் நேரம் 2:10-லிருந்து 2:25-க்கு மாறும்போது, நிமிட முள்ளின் முனை கடந்த தூரம் எவ்வளவு?

(A) 6.25 செ.மீ.

(B) 6.26 செ.மீ.

(C) 6.27 செ.மீ.

(D) 6.28 செ.மீ.

59. அருண் தனது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி 6 கி.மீ. பயணிக்கிறார். அங்கிருந்து வலதுபுறம் திரும்பி 2 கி.மீ. பயணிக்கிறார். அதன்பிறகு, மீண்டும் வலதுபுறம் திரும்பி 12 கி.மீ. பயணிக்கிறார். அங்கிருந்து இடதுபுறம் திரும்பி 6 கி.மீ. பயணிக்கிறார். தற்போது அருண் தனது வீட்டிலிருந்து எத்தனை கி.மீ. தொலைவில் இருக்கிறார்?

(A) 10 கி.மீ.

(B) 11 கி.மீ.

(C) 12 கி.மீ.

(D) 13 கி.மீ.

60. Mohammed Nazeem
Nazriya Manzil
P. O. Box No. 10160
Navy Mumbai

ஒரே மாதிரியாக இருப்பதைக் கண்டறியவும்:

(A) Mohammed Nazeem
Nazriya Mansil
P. O. Box No. 10160
Navy Mumbai

(B) Mohammed Nazeem
Nazriya Manzil
P. O. Box No. 10106
Navy Mumbai

(C) Mohammed Nazeem
Nazriya Manzil
P. O. Box No. 10160
Navy Mumbai

(D) Mohammed Naseem
Nazriya Manzil
P. O. Box No. 10160
Navy Mumbai

61. பாரதிய நியாய சம்ஹிதா (BNS) நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?

(A) 2021

(B) 2022

(C) 2023

(D) 2024

62. பாரதிய நியாய சம்ஹிதாவின் (BNS) படி, குற்றம் (Offence) என்பதன் பொருள் என்ன?

(A) எந்தவொரு சட்ட மீறல்

(B) வெட்கக்கேடான செயல்

(C) BNS இன் படி தண்டனைக்குரிய செயல்

(D) ஒரு நபரின் சட்டவிரோத செயல்

63. பாரதிய நியாய சம்ஹிதாவின் (BNS) படி, Trifles என்பது எதை குறிக்கிறது?

(A) கடுமையான குற்றங்கள்

(B) அற்பமான, அதிகம் கவனிக்கப்படாத செயல்கள்

(C) பொதுப் பிரச்சினைகள்

(D) நீதிமன்ற நடவடிக்கைகள்

64. பாரதிய நியாய சம்ஹிதாவில் (BNS) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தண்டனைகள் யாவை?

(A) கடுமையான சிறைத்தண்டனை

(B) அபராத தண்டனை

(C) நாடுகடத்தல்

(D) கட்டாய சமூகப் பணி

65. பாரதிய நியாய சுரக்ஷா சம்ஹிதாவின் (BNSS) கீழ், அழைப்பானை (SUMMONS) அனுப்ப யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) காவல் ஆய்வாளர்

(B) நீதிமன்றங்கள்

(C) மாவட்ட ஆட்சியர்

(D) சட்டமன்ற சபாநாயகர்

66. பாரதிய நியாய சுரக்ஷா சம்ஹிதாவின் (BNSS) பிரிவுகள் 168 முதல் 172 வரையிலான செயல்முறைகளின் முக்கிய நோக்கம் என்ன?

(A) நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் குறைத்தல்.

(B) குற்றம் நிகழாமல் தடுப்பது.

(C) ஜாமீன் மறுப்பதற்கான ஒரு வழியை உருவாக்குவது.

(D) பிடியாணை (வாரண்ட்) இல்லாமல் கைது செய்தல்.

67. பாரதிய நியாய சுரக்ஷா சம்ஹிதாவின் (BNSS) படி, காவல்துறை எவ்வளவு காலத்திற்குள் முதல் தகவல் அறிக்கையை (FIR) பதிவு செய்ய வேண்டும்?

(A) 7 நாட்களுக்குள்

(B) உடனடியாக

(C) 24 மணி நேரத்திற்குள்

(D) மேலதிகாரியின் அனுமதியைப் பெற்ற பிறகு

68. பாரதிய சாக்ஷிய ஆதினியத்தின் (சட்டத்தின்) (BSA) எந்தப் பிரிவின் கீழ் சாட்சியம் (evidence) என்ற சொல் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 1

(B) பிரிவு 2

(C) பிரிவு 3

(D) பிரிவு 4

69. ஒரு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கான முயற்சி.

(A) Cross - Re - Chief

(B) Chief - Re - Cross

(C) Chief - Cross - Re

(D) Re - Chief - Cross

70. கேரள காவல்துறைச் சட்டத்தில், காவல்துறை அதிகாரிகளின் நடத்தை பற்றி எங்கே விவரிக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 29

(B) பிரிவு 30

(C) பிரிவு 31

(D) பிரிவு 32

71. கேரள காவல்துறைச் சட்டத்தின் பிரிவு 98-இன் கீழ், ஒரு சிறப்பு காவல் அதிகாரியை நியமிப்பவர் யார்?

(A) மாவட்ட ஆட்சியர்

(B) மாவட்ட நீதிபதி

(C) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

(D) மாவட்ட குற்றவியல் நடுவர்

72. கேரள காவல்துறைச் சட்டத்தின் பிரிவு 117-இன் படி, காவல்துறையின் கடமைகளில் தலையிடுவதற்கான அதிகபட்ச தண்டனை

(A) 6 மாதங்கள் சிறைத் தண்டனை

(B) 1 ஆண்டு சிறைத் தண்டனை

(C) 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(D) 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை

73. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI Act) பிரிவு 11-இன் கீழ், மூன்றாம் தரப்பினர் தொடர்பான தகவல்களை எப்போது வெளிப்படுத்தலாம்?

(A) மூன்றாம் தரப்பினரின் சம்மதத்துடன் மட்டுமே.

(B) பொது நலனுக்கானது எனக் கருதி, மூன்றாம் தரப்பினர் முறையீடு செய்ய பொதுத் தகவல் அதிகாரி அனுமதித்தால்.

(C) நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் மட்டுமே.

(D) ஒருபோதும் கூடாது; அது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

74. தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 66F, எந்தச் சூழ்நிலைகளின் கீழ் விதிக்கப்படுகிறது?

(A) ஒரு நபர், மற்றொருவரின் அடையாளத்தைத் திருடி, ஒரு போலி சுயவிவரத்தை உருவாக்குதல்.

(B) ஒரு நபர், பாதுகாக்கப்பட்ட அமைப்புகளுக்குள் அங்கீகாரம் இன்றி நுழைந்து, தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவித்தல்.

(C) ஒரு நபர், மின்னஞ்சல் மூலம் வீண் (Spam) செய்திகளை அனுப்புதல்.

(D) ஒரு இணையதளத்தில் ஆபாசமான உள்ளடக்கத்தை வெளியிடுதல்.

75. ஒரு பத்திரிகையாளர் அமைச்சரவைக் குறிப்புகள் குறித்த தகவல்களைக் கோரும்போது, பொதுத் தகவல் அதிகாரி அதை வழங்க மறுக்கிறார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் இந்த விலக்கு நியாயப்படுத்தப்பட வாய்ப்புள்ளது?

(A) பிரிவு 8 (1) (i)

(B) பிரிவு 9

(C) பிரிவு 2 (f)

(D) பிரிவு 11

76. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-இன் பிரிவு 67B, எதனுடன் தொடர்புடையது?

(A) சைபர் (இணைய) பயங்கரவாதம்

(B) ஆபாசமான உள்ளடக்கத்தை வெளியிடுதல்

(C) குழந்தைகள் சம்பந்தப்பட்ட, பாலியல் ரீதியாக வெளிப்படையான உள்ளடக்கத்தை வெளியிடுதல்

(D) தனியுரிமை மீறல்

77. ஒரு நபர் தனது வீட்டில் போதைப்பொருட்களை வைத்திருக்கத் தெரிந்தே அனுமதித்தால், NDPS சட்டத்தின் கீழ் சட்டப்படி என்ன நடக்கும்?

(A) போதைப்பொருட்கள் தனிப்பட்ட மருந்து பயன்பாட்டிற்கானவை என்றால் அவர்கள் குற்றப் பொறுப்பிற்கு உள்ளாக மாட்டார்கள்.

(B) பிரிவு 27-இன் கீழ் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யலாம்.

(C) போதைப்பொருள் குற்றங்களுக்காக வளாகத்தைப் பயன்படுத்த அனுமதித்ததற்காக, பிரிவு 25-இன் கீழ் அவர்கள் குற்றப் பொறுப்பிற்கு உள்ளாவார்கள்.

(D) அவர்கள் அந்தச் சொத்தின்/அமைவிடத்தின் உரிமையாளராக இருந்தால் மட்டுமே பொறுப்பாவார்கள்.

78. பின்வரும் எந்தச் சூழ்நிலை, NDPS சட்டத்தின் பிரிவு 31A-ஐச் செயல்படுத்தக் காரணமாக அமையக்கூடும்?

(A) தனிப்பட்ட பயன்பாட்டிற்காக சிறிய அளவிலான உள நிலைமாற்றி (Psychotropic) பொருட்களை முதல் முறையாகப் பயன்படுத்துதல்.

(B) உளநிலைமாற்றி (Psychotropic) பொருட்களை மீண்டும் மீண்டும் உட்கொள்ளுதல்.

(C) வணிக அளவிலான போதை மருந்துகள் தொடர்பான குற்றத்தை மீண்டும் மீண்டும் செய்தல்.

(D) தடைசெய்யப்பட்ட ஒரு போதைப் பொருளை உட்கொள்ள முயற்சி.

79. போக்சோ சட்டத்தின் பிரிவு 3-இன் படி, பின்வருவனவற்றுள் எது "ஊடுருவுகிற பாலியல் வன்கொடுமை" செயல் எனக் கருதப்படுகிறது?

(A) ஒரு குழந்தையின் சம்மதம் இன்றி, அதன் அந்தரங்க உறுப்புகளைத் தொடுதல்.

(B) ஒரு குழந்தைக்கு ஆபாசமான செய்திகளை அனுப்புவதாக மிரட்டுதல்.

(C) ஒரு குழந்தையின் அந்தரங்க உறுப்புகளில் ஏதேனும் ஒரு பொருளை உட்செலுத்துதல்.

(D) ஒரு குழந்தைக்கு ஆபாசமான உள்ளடக்கத்தைக் (படத்தை) காட்டுதல்.

80. போக்சோ சட்டத்தின் பிரிவு 22, தவறான புகாரை தாக்கல் செய்வதற்கு தண்டனையை வழங்குகிறது. இப்பிரிவு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(A) ஆதாரமற்ற புகார் அளிக்கும் எந்தவொரு நபரும் தண்டனைக்குரியவர்

(B) ஒரு குழந்தையால் அளிக்கப்படும் பொய்ப் புகார்கள் தண்டனைக்குரியவை அல்ல.

(C) இப்பிரிவின் கீழ், காவல்துறை அதிகாரிகள் மட்டுமே தண்டிக்கப்படுவார்கள்.

(D) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் தண்டனை, குற்றத்தை விட அதிகம் கடுமையானது.

81. 'காப்பு' என்பதன் சரியான சொல்லைத் தருக.

(A) கடன்பட்டவர்
(B) காப்பவர்
(C) ஆபரணம்
(D) கப்பம்

82. சரியான தொடரைத் தேர்வு செய்து எழுதுக.

(A) படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர்.

(B) பல படை வந்திடினும் பல தடைகள் நேரிடினும் அஞ்சாதீர்.

(C) படைகள் பல வந்திடினும் தடைகள் பல நேரிடினும் அஞ்சாதீர்.

(D) பலபல படைகள் வந்திடினும் தடைகள் பலபல நேரிடினும் அஞ்சாதீர்.

83. 'Electronic' என்பதன் இணையான தமிழ்ச் சொல்லை தேர்வு செய்யவும்.

(A) கணினி

(B) மின்னஞ்சல்

(C) மென்பொருள்

(D) மின்னணு

84. கீழ்க்காணும் வரிகளில் தனிச்சொல்லை எடுத்து எழுதுக.

படியாத பெண்ணினால் தீமை - என்ன

பயன்விளைப் பாளந்த ஊமை.

(A) என்ன

(B) தீமை

(C) ஊமை

(D) பெண்ணினால்

85. துயரம் என்ற சொல்லிற்கு ஒத்த சொல்லை தேர்வு செய்யவும்.

(A) உயரம்

(B) சோகம்

(C) துன்பம்

(D) வேதனை

86. எதிர்ச்சொல் தருக.

தீயவை - என்ற சொல்லின் எதிர்ச்சொல் எது?

(A) தீங்கு

(B) நல்லவை

(C) நற்குணம்

(D) நீர்

87. இணையான சொல் எது?

"உன் சரணல்லால் சரணில்லை" என்னும் தொடரில் 'சரண்' என்ற சொல்லுக்கு இணையான பொருள் எது?

(A) வணங்குதல்

(B) அடைக்கலம் வேண்டல்

(C) பணிதல்

(D) சரணடைதல்

௮௮. கீழ்த்தரப்பட்டிருக்கும் பழமொழித் தொடர்களில் சரியானதை தேர்ந்தெடுக்கவும்.

(A) ஈட்டி எட்டடி பாயும்; பணம் பத்தடி பாயும்.

(B) ஈட்டியும் பணமும் பத்தடி பாயும்.

(C) ஈட்டி எட்டடி பாய்ந்தால் பணம் பத்தடி பாயும்.

(D) ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.

௮௯. சேர்த்தெழுதுக.

அழும் + குழவி என்ற சொல்லை சேர்த்தெழுதவும்.

(A) அழுகுழவி

(B) அழுதகுழவி

(C) அழுங்குழவி

(D) அழும்குழவி

௯௦. சரியான வாக்கியத்தை தேர்வு செய்யவும்.

(A) இக்குற்றம் கண்டிக்கப்பட வேண்டுவது மட்டுமன்று; தண்டிக்கப்பட வேண்டுவதாகும்.

(B) இக்குற்றம் கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டும்.

(C) இக்குற்றம் கண்டிப்பதோடு மட்டுமல்ல, தண்டித்தே ஆகவேண்டும்.

(D) இக்குற்றம் கண்டித்தும் தண்டித்தும் வேண்டும்.

**91. Identify the word with the correct spelling.**

**(A) conscensus**

**(B) consensus**

**(C) concesus**

**(D) Concsensus**

**92. Which is the plural form of the word "cactus"?**

**(A) cacti**

**(B) cactuses**

**(C) cactus**

**(D) cactusses**

93. Fill in the blank with the appropriate article.

"I need _____ new laptop for my work."

(A) a

(B) an

(C) the

(D) no article

94. Choose the correct form of the verb to complete the sentence:

"Neither the team nor the coach _____ satisfied with the result."

(A) is

(B) are

(C) has

(D) have

95. Convert the following sentence into passive voice.

"My mother prepared a delicious meal."

(A) A delicious meal is prepared by my mother.

(B) A delicious meal was prepared by my mother.

(C) My mother was preparing a delicious meal.

(D) My mother prepares a delicious meal.

96. Choose the correct option to complete the sentence:

"She performed _____ in the dance competition."

(A) good

(B) well

(C) better

(D) best

97. Identify the antonym for the word "benevolent."

(A) Malevolent

(B) Compassionate

(C) Altruistic

(D) Generous

**98. What does ATM commonly refer to in banking?**

**(A) Advanced Transaction Module**

**(B) Automatic Transfer Mechanism**

**(C) Automated Teller Machine**

**(D) Account Transfer Management**

**99. Which of the following is a synonym for "voracious"?**

**(A) insatiable** **(B) indifferent**

**(C) Modest** **(D) Reluctant**

**100. Which sentence is grammatically correct?**

**(A) She don't like pizza** **(B) She doesn't like pizza**

**(C) She not likes pizza** **(D) She is not like pizza**

---

## SPACE FOR ROUGH WORK